ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2312/26 - 2022 දෙසැම්බර් මස 28 වැනි බදාදා - 2022.12.28
*2312/26 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 6/1996*

**1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றச் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

அறிவிப்பு

**(முதலாம் அட்டவணையின் (1) ஆம் பந்தி**

நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச ஆகிய நான், 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் (1) ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக இருபது மில்லியன் ரூபா என்ற பணத்தொகைக்குப் பதிலாக 2023.02.01 ஆந் திகதியிலிருந்து ஐம்பது மில்லியன் ரூபா என்ற தொகையை இவ்வறிவிப்பின் மூலம் நிர்ணயிக்கின்றேன்.

இந்நாணயப் பெறுமதி அதிகரிப்புச் செய்தல் 2023.01.31 ஆந் திகதிக்கு முன்னர் மேல் நீதிமன்றத்தில் கோரப்பட்டுள்ள வழக்கு நடவடிக்கைகளுக்காக ஏற்புடையதாகாது.

1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்டதும், 2019 பெப்ருவரி 28 ஆந் திகதிய 2112/33 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான அறிவிப்பு, அதன் கீழ் உரியமுறையில் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

கலாநிதி **விஜயதாச ராஜபக்ச,**
நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு
*2022, திசெம்பர் 22.*

EOG 12 - 0376

1A - G 38467 — 56 (2022/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*